செ. கு. எண்: 054 நாள்: 02.04.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 2.4.2018

---

புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் திரு. சி.வி. ராஜேந்திரன் அவர்கள் 1.4.2018 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரைப்பட இயக்குநர் திரு.சி.வி. ராஜேந்திரன் அவர்கள் உதவி இயக்குநராக பணியாற்றி, பின்னர் ''அனுபவம் புதுமை'' என்ற திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடித்த ''கலாட்டா கல்யாணம்,'' "ராஜா'', ''நீதி'', ''சுமதி என் சுந்தரி'' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ளார். திரு.சி.வி. ராஜேந்திரன் அவர்கள் தமிழ் மட்டுமின்றி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளிலும் திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

திரு. சி.வி ராஜேந்திரன் அவர்கள் தரமான தமிழ் திரைப்படங்களில் மானியம் பெறுவதற்குத் தகுதியுடைய தமிழ் திரைப்படங்களை தேர்வு செய்யும் குழுவில் உறுப்பினராகவும், திரைப்படத் துறையினர் நலவாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

அனைவரிடமும் அன்பாக பழகக்கூடியவரும், திரைத்துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவருமான திரு.சி.வி. ராஜேந்திரன் அவர்களின் மறைவு தமிழ் திரையுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

திரு.சி.வி. ராஜேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**